

# ரஃப்ளர் ஃபூட்

**இந்த பாடத்திலே, உஷா ஜெனோம் ரஃப்ளர் ஃபுட் -ஐ பயன்படுத்தி,சுருக்கங்களையும் பலவிதமான, மடிப்புகளையும், எப்படி சுலபமா, செய்யறதுன்னு கத்துக்கப்போறீங்க.**



இந்த ஃபுட் , உங்க அவுட் ஃபிட்ஸ்-க்கு, அழகான மாற்றங்களை சேர்க்க ஒரு சுலபமான வழியா இருக்கும். .உங்க வீட்டு அலங்கார பொருட்கள்-லேயும், உங்களாலே,ஃபெமினைன் டச் கொடுக்க முடியும்.




இந்த பாடத்துக்கு உங்களுக்குத்தேவையானது, உஷா ஜேனோம் ரஃப்ளர் ஃபுட் ,15-க்கு, 5-அங்குல, அளவிலே நாலு துணி துண்டுகள்-பலநிறங்கள்-லே இருக்கலாம்.ஒரு கத்தரிக்கோல்.

இது, ரஃப்ளர் ஃபுட் இது பார்க்கறதுக்கு, கனமா, காம்ப்ளிகேடட்-ஆ, இருக்கு.ஆனா, இதை பயன்படுத்தறது சுலபம், நீங்க, பயப்பட வேண்டாம்.



இது தான், ராட்சட் கியர் ஃபீட் ப்ளேட். எண்கள் இருக்கிற, இந்த ஸ்லாட்ஸ்,சுருக்கங்கள் எவ்வளவு நெருக்கத்திலே, அல்லது எவ்வளவு தூரத்திலே வரணும்- ங்கறதை கன்ட்ரோல் பண்ண , உங்களுக்கு உதவியா இருக்கும்..முதல் ஸ்லாட் -லே, ஒண்ணு-ன்னு மார்க் பண்ணியிருக்கு. அப்படின்னா, ஒவ்வொரு தையலுக்கும் ஒரு சுருக்கம் விழும். 6-ன்னு, மார்க் பண்ணியிருக்கிற ஸ்லாட் -லே, ஒவ்வொரு ஆறாவது தையலுக்கு அப்புறம் ஒரு சுருக்கம் விழும்.12 ன்னு போட்டிருக்கிற ஸ்லாட் -லே, 12-தையலுக்கு, ஒரு சுருக்கம் விழும். இடது கோடியிலே ஸ்டார் மார்க் இருக்கிற ஸ்லாட் , நேர் தையலுக்கானது. விரும்பற இடங்கள்-லே நீங்க, சுருக்கங்களை உண்டாக்கலாம்.



இங்கே இருக்கிற ப்ளாக் ஸ்க்ரூ தான்,, ரஃப்ளிங் டெப்த் ஸ்க்ரூ.இது மடிப்புகளுடைய டெப்த் -ஐ, அட்ஜஸ்ட் பண்ண உதவுது. ஒண்ணு,- சின்ன மடிப்புகளுக்கு.4,6,8- இன்னும் ஆழமான மடிப்புகளுக்கு.

நார்மல் ப்ரெஸ்ஸர் ஃபுட்-ஐ, எடுத்திடுங்க. பாடத்திலே காட்டியிருக்கிற மாதிரி, ரஃப்ளர் ஃபுட்-ஐ, நீடில் ஸ்க்ரூ-வுக்கு மேலே இருக்கிற, கறுப்பு ப்ளாஸ்டிக் ஆர்ம்-லே மாட்டுங்க.





முதல் ஸ்லாட் -ஐ, பயன்படுத்தி, ஒவ்வொரு தையலுக்கும் ஒரு சுருக்கம் வர்ர மாதிரி ஆரம்பிக்கலாம். உங்க, மெஷினை, செட் பண்ணுங்க. த்ரெட் டென்ஷன் ஐ, 4-க்கு திருப்புங்க. பேட்டர்ன் செலக்டர்-லே,நேர் தையலுக்கான , A- வை, செலக்ட் பண்ணுங்க. ஸ்டிச் லெந்த்-ஐ, 2½ -லே, செட் பண்ணுங்க.






முதல் துணியை, ரஃப்ளர் ஃபுட்-க்கு கீழே வெச்சு, இந்த மாதிரி தைக்க ஆரம்பியுங்க. அடுத்தது, ராட்சட் கியர் ஃபீட் ப்ளேட்-ஐ மூவ் பண்ணி, ,6- தையல் ஸ்லாட்--க்கு, மாத்தி தைச்சு பார்க்கலாம்.

உங்க கிட்டே இருக்கிற அடுத்த துணியை, ரஃப்ளர் ஃபுட் க்கு கீழே வெச்சு, 6- தையலுக்கு ஒரு சுருக்கம் கிடைக்கறதுக்கு, தைக்க ஆரம்பியுங்க.



இப்போ, 12-ன்னு போட்டிருக்கிற ஸ்லாட்-க்கு, மூவ் பண்ணி,மூணாவது துணியை வெச்சு, தைக்க ஆரம்பியுங்க. இப்போ, மூணு துணிகளையும், ஒண்ணு கீழே ஒண்ணா, வையுங்க. ஒண்ணாவது ஸ்லாட்-லே, தைச்ச துணியிலே,சுருக்கங்கள், நெருக்கமா இருக்கறதை நீங்க பார்க்கலாம். 6- தையல் ஸ்லாட்– லே தைச்சதிலே,
6- தையல் தள்ளி, சுருக்கம் இருக்கு 12-ஆம் நம்பர் ஸ்லாட்-லே தைச்ச துணியிலே, தொடர்ந்து,12- தையல் தள்ளி, சுருக்கங்கள் ஏற்பட்டிருக்கு. இப்போ, துணியினுடைய ப்ளீட்ஸ்-லே, டெப்த் ஸ்க்ரூ- வோட எஃபெக்ட்-, எப்படி இருக்குன்னு பார்க்கலாம். இதை ப்ராக்டிஸ் பண்றதுக்கு, நமக்கு ஒரு துண்டு துணி வேணும்.





மெஷினை, செட் பண்ணுங்க ராட்சட் கியர் -ஐ, ஒரு தையலுக்கு, ஒரு சுருக்கம் கிடைக்கறதுக்காக, ஸ்லாட் 1- க்கு, மாத்துங்க. ரஃப்ளிங் டெப்த் ஸ்க்ரூ-வை, 8-லே, செட் பண்ணுங்க.

துணியை வெச்சு, இந்த செட்டிங்-லே, 5- அங்குல நீளத்துக்கு சுருக்கங்கள் இருக்கற மாதிரி தையுங்க.


அடுத்தது, ரஃப்ளிங் டெப்த் ஸ்க்ரூ-வை மூவ் பண்ணி, டெப்த்-ஐ, 6-க்கு மாத்துங்க.

ப்ரெஸ்ஸர் ஃபுட்- ஐ, தூக்கி, இப்போ நீங்க செய்த சுருக்கங்கள் இருக்கிற இடத்திலே இருந்து, துணியை, மூணு, நாலு அங்குலம் இழுத்து விடுங்க.அப்புறம்,இந்த டெப்த் -லே,இன்னும், 5- அங்குல நீளத்துக்கு சுருக்கங்களை தையுங்க.



இப்போ, டெப்த்-ஐ, 4-க்கு குறைச்சு, முன்னே பண்ண மாதிரியே,துணியிலே கொஞ்ச நீளம் விட்டுட்டு, அடுத்த 5- அங்குலத்துக்கு சுருக்கங்கள் உண்டாக்கறதுக்கு, தைக்க ஆரம்பியுங்க.கடைசி ஸ்டெப் , டெப்த் -ஐ, 1-க்கு கொண்டு வந்து, தையுங்க.
இப்போ துணியை மெஷின்-லே இருந்து எடுத்து, கீழே வையுங்க, ரஃபிள் டெப்த் ஸ்க்ரூ-வோட, எஃபெக்ட் -ஐ, பாருங்க. நம்பர் 1-லே ஏற்பட்ட சுருக்கங்கள், லைட்-ஆ இழுக்கப்பட்டிருக்கு. நம்பர் 8-லே, நிறைய துணி எடுக்கப்பட்டிருக்கு.நீங்க ப்ராக்டிஸ் பண்ணும் போது,வெவ்வேற ப்ராஜக்ட்களுக்கு, எவ்வளவு துணி தேவைப்படும்-னு, உங்களுக்கு தெரிஞ்சிடும்.





இப்போ, பல டெப்த்ஸ் கொடுக்கிற எஃபெக்ட்-ஐ, நீங்க பார்த்தீங்க. இன்னொரு இன்ட்ரஸ்டிங் ஆன அம்சத்தைப் பார்க்கலாம். பலவிஷயங்களைச் செய்ய இது பயன்படும், சுருக்கங்களை உண்டாக்கலாம், அதே சமயத்திலே இன்னொரு துணியை அதோட இணைக்கலாம். இது நல்லா இருக்கும்.இது ரெண்டுமுறை தைக்கறது, அலைன் பண்றது, இந்த மாதிரி கஷ்டங்கள் இல்லாம பண்ணிடும்.இதுக்கு உங்களுக்கு 6-க்கு 8- அங்குலம் அளவிலே, ஒரு துணியும்,அதை விட கொஞ்சம் நீளமான ஒரு துண்டு துணியும் தேவைப்படும்.அதை தான், நீங்க சுருக்கங்கள் உண்டாக்கறதுக்கு, பயன்படுத்துவீங்க.ரஃபிள் ராட்சட் கியர் ஃபீட் ப்ளேட் -ஐ, 6-லே, செட் பண்ணுங்க. டெப்த் - ஐ, 8-க்கு இன்க்ரீஸ் பண்ணுங்க. ஸ்டிச் -ஐயும் ,டெப்த் -ஐயும், உங்க விருப்பப்படி ,செலக்ட் பண்ணிக்கலாம்.6-க்கு 8- அங்குல அளவிலே இருக்கிற துணியை, ப்ரெஸ்ஸர்ஃபுட்-க்கு கீழே வையுங்க.அதுக்கு அப்புறம், அட்டாச் பண்ணி, சுருக்கம் ஏற்படுத்த வேண்டிய துணியை, பாடத்திலே காட்டியிருக்கிறபடி, ரஃபிள் ஃபுட்-னுடைய ஸ்லிட்-லே வையுங்க.







ரெண்டு துண்டுகளையும்,அதனோட இடத்திலே வெச்ச பிறகு,தைக்க ஆரம்பியுங்க.எப்படி சுருக்கங்கள் ஒரே சீரா உருவாகுது, அதே சமயம், ரெண்டு துண்டுகளும் இணைக்கப்படுதுன்னு, பாருங்க.

அதிகப்படியான நூலையும், துணியையும், வெட்டி எடுத்துடுங்க.
அது இப்படி தான் இருக்கணும்.ஒவ்வொரு 6- தையலுக்கும், சுருக்கங்களோட துணியும் இணைக்கப்பட்டிருக்கு.
எங்கேயும் எல்லா இடத்திலேயும்,சுருக்கங்களை க்ரியேடிவ்-ஆ, பயன்படுத்தலாம்.உங்களுடைய ட்ரெஸ்-ஐ , ஆக்ஸசரீஸ் -ஐ, சுருக்கங்களையும், மடிப்புகளையும் வெச்சு அலங்காரம் பண்ணலாம்.எங்கே இணைச்சாலும் அதுங்க அழகும், பகட்டும் , ஸ்டைல்-ம், கொடுக்கும்.அழகான டிசைன்களை க்ரியேட் பண்றதுக்கு டெப்த் -ஐயும், டக் லெந்த்-ஐயும், எக்ஸ்பெரிமென்ட் பண்ணி பார்க்கலாம்.
இந்த ஹேர்பேண்ட் மாதிரி. இங்கே தான் சுருக்கங்களை தைச்சிருக்கோம்.
ப்ராக்டிஸ் பண்ணுங்க, எக்ஸ்பெரிமென்ட் பண்ணுங்க. நீங்க விரும்பினதை எல்லாம், அது எப்படி, அற்புதமா மாற்றுதுன்னு பாருங்க.